**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 101/2019 |
| Name | : Thangaraj |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சாமராயப்பட்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்கிறேன். கடந்த 23.08.2017 ம் தேதி அதிகாலை 03.30 மணிக்கு நான் கறவை மாடு வாங்குவதற்காக திருச்செங்கோட்டிற்கு சென்றுவிட்டேன். வீட்டில் எனது இளைய மகன் ஓம் பிரகாஷ் எனது மனைவி பூமதி ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் காலை 10.00 மணிக்கு விவசாய பூமிக்குவேலைக்கு சென்றுவிட்டார்கள். மீண்டும் 02.00 மணிக்கு திரும்பி வந்து பார்த்த போது வீட்டின் தாழ்பாள் உடைந்திருந்தது உள்ளே சென்று பார்த்த போது பீரோவின் லாக்கர் உடைக்கப்பட்டிருந்தது அதில் வைக்கப்பட்டிருந்த ரூ.10 ஆயிரம் மதிப்புள்ள வெள்ளை கல் பதித்த சங்கு மோதிரம் மற்றும் சிவப்பு கல் பதித்தத மோதிரம் காணாமல் போயிருந்தது எனது மனைவியும், மகனும் எனக்கு போன் மூலல் தகவல் சொன்னார்கள். நான் மாலை 06.00 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டு கொமரலிங்கம் காவல் நிலையத்தில் எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 24.08.2017 அன்று மாலை 06.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள் நான்

சென்று மோதிரத்தை அடையாளம் காண்பித்தேன். காவல் நிலையத்தில் ஆஜர் எதிரியை அடையாளம் காண்பித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மோதிரங்கள் தான் காணாமல் போன மோதிரங்கள் ஆகும். வெள்ளை கல் பதித்த சங்கு மோதிரம் **அ.சா.பொ.1 மற்றும் சிவப்பு கல் பதித்த மோதிரம் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் மோதிரங்களை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். இன்று நீதிமன்றத்திற்கு மோதிரங்களை கொண்டு வந்துள்ளேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 101/2019 |
| Name | : Boomathi |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சாமராயப்பட்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்கிறேன். அ.சா.1 எனது கணவர். 23.08.2017 ம் தேதி மதியம் 02.00 மணிக்கு தோட்டம் போய்விட்டு திரும்பி வந்த போது வீட்டின் கதவு பூட்டு உடைக்கப்பட்டிருந்தது உள்ளே சென்று பார்த்த போது பீரோ உடைக்கப்பட்டிருந்தது பீரோவில் வைக்கப்பட்டிருந்த சங்கு மோதிரம் மற்றும் சிவப்பு பவள மோதிரம் காணாமல் போயிருந்தது. வெளியே சென்றிருந்த எனது கணவருக்கு தகவல் கொடுத்து அவர் வந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் மோதிரம் கிடைத்துவிட்டதாக சொன்னதன் பேரில் எனது கணவர் காவல் நிலையம் சென்றார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 101/2019 |
| Name | : Boopalan |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சாமராயப்பட்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்கிறேன். சாமராயபட்டியில் உள்ள எனது வீட்டில் இருந்து அருகில் உள்ள கடைக்கு சென்றேன் அப்போது கருப்பு தோள் பை அணிந்து ஒரு வெளியூர்க்காரர் அங்கு நின்றிருந்தார் நான் கடையில் சாமான் வாங்கிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்பு தங்கராஜ் வீட்டில் பொருள் திருட்டுபோனதாக தெரிய வந்தது. நான் தங்கராஜிடம் வெளியூர்காரர் ஒருவர் இருந்ததை பற்றி சொன்னேன். ஆஜர் எதிரி தான் அன்று நான் எங்கள் ஊரில் பார்த்த நபர். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கருப்பு நிற தோள்பை தான் அன்று ஆஜர் எதிரி அணிந்திருந்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்